1979 மார்ச் 7]

மாற்றி, தமிழிலே போட வேண்டுமென்ற எண்ணத்தையெல்லாம் அப்பொழுது முன்வைக்க இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கேள்வியின் முதல் பகுதியில், விலை நிர்ணயத்தைப் பற்றி கேட்டார்கள். விவசாயப் பெருங்குடி மக்கள் ஒன்றாகக் கூடி அந்த விலையை நிர்ணயிக்க மைய அரசிடத்திலே ஆலோசனை பெற்று செய்யலாமா என்று கேட்டார்கள். அதைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.

பாபநாசம் அணையிலிருந்து தண்ணீர்.

*வினா எண் 273— திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் இருக்கும் பாபநாசம் அணைத் தண்ணீரை சேர்வலாறு சங்கம இடமான முண்டந்துரையிலிருந்து கால்வாய் மூலம் மணிமுத்தாறு அணையில் சேர்க்க வேண்டி அரசுக்கு ஏதேனும் கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பெற்ற நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவரவர்களே, பாபநாசம் அணைத் தண்ணீரை சேர்வலாறு சங்கம இடமான முண்டந்துரையிலிருந்து கால்வாய் மூலம் மணிமுத்தாறு அணையில் சேர்த்தால், அநேக ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்று தெரிகிறது. ஆகவே, அரசு அதை மறுபரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பரிசீலனையில் உள்ளது.

களியாம்பூண்டியில் ஆரம்ப சுகாதார நிலையம்.

*வினா எண். 274— திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உத்திரமேரூர் தொகுதியைச் சார்ந்த களியாம்பூண்டி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?